19.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெற்றிலை விலை கடும் வீழ்ச்சி: விலை நிர்ணயம் கிடைக்குமா? ஏக்கத்தில் விவசாயிகள்



வெற்றிலை விலை கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ள நிலையில் அவற்றிற்கு விலை நிர்ணயம் கிடைக்குமா? என்ற ஏக்கத்தில் விவசாயிகள் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றின் கரையோரம் உள்ள வேலாயுதம்பாளையம், குளித்தலை, மாயனூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 15,000 ஏக்கருக்கு மேல் வெற்றிலை சாகுபடி நடைபெற்று வருகிறது. கற்பூரம், வெள்ளை பச்சைக்கொடி என இருவகையான வெற்றிலைகள் பயிரிடப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் வெற்றிலை உற்பத்தி அதிகம் இருந்தும் விலை கிடைக்காததால் விவசாயிகள்

வெற்றிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா? என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

**இதுதொடர்பாக புகளூர் வட்டார வெற்றிலை விவசாயிகள் சங்கச் செயலாளர் க.ராமசாமி கூறுகையில்,**

மூலிகை பயிராக உள்ள கரூர் மாவட்ட வெற்றிலைக்கு சுதந்திரத்திற்கு முன் பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, மலேசியா நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்தது. இப்போது நம் நாட்டிற்குள் மட்டும் விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக டெல்லி, குஜராத் மாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. தற்போது நல்ல உற்பத்தி தொடங்கியுள்ள நிலையில் விலை கிடைப்பதில்லை.

தற்போது நல்ல விளைச்சல் இருந்தும் சுமைக்கு ரூ.3,000 மட்டுமே கிடைப்பதால் விவசாயிகளுக்கு உரச்செலவு, ஆட்கள் கூலிக்கு கூட விலை கிட்டாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உற்பத்தி அதிகம் இருக்கும் காலத்திலும், குறைவான காலத்திலும் ஒரே மாதிரியான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் வெற்றிலை விவசாயம் சீராக நடைபெறும் என்றார்.

## விதை உளுந்து வழங்கக்கோரி வேளாண் அலுவலகம் முற்றுகை

பழனி பகுதியில் விதை உளுந்து வழங்கக்கோரி ஏராளமான விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டனர்.

பழனி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாக பழனி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள், விதைகள், உரங்கள், நுண்ணூட்ட சத்துக்கள் ஆகியன மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் விவசாயிகளுக்கு மானியவிலையில் விதை நெல், விதை உளுந்து, உரங்கள் வழங்கப்பட்டன. இந்நிலையில் நெய்க்காரபட்டியை அடுத்த ஆர்.வாடிப்பட்டி பகுதி விவசாயிகளுக்கு விதை உளுந்து வழங்கப்படவில்லை எனக்கூறி, ஏராளமான விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது: வேளாண் அலுவலகத்தில் அரசால் மானிய விலையில் வழங்கப்படும் பொருள்கள் சரிவர விவசாயிகளை சென்றடைவதில்லை. மொத்தமாக பெரிய விவசாயிகளுக்கு சென்றுவிடுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் உளுந்து பயிரிட விதை உளுந்து, உரம், நுண்ணூட்டம் என சுமார் 4,500 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் அய்யம்பாளையம், தாதநாயக்கன்பட்டியில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் உள்ள ஆர்.வாடிப்பட்டிக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்தனர்.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் கூறுகையில், மானிய விலையில் விவசாய பொருள்கள் வழங்கப்படுவதை சிலர் அரசியலாக்குகின்றனர்.

இதனால் எதையும் உடனடியாக செய்ய முடிவதில்லை. ஆனால் விவசாயிகளுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்றார்.

பழனி பகுதியில் விதை உளுந்து வழங்கக்கோரி ஏராளமான விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டனர்.

பழனி வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாக பழனி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள், விதைகள், உரங்கள், நுண்ணூட்ட சத்துக்கள் ஆகியன மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் விவசாயிகளுக்கு மானியவிலையில் விதை நெல், விதை உளுந்து, உரங்கள் வழங்கப்பட்டன. இந்நிலையில் நெய்க்காரபட்டியை அடுத்த ஆர்.வாடிப்பட்டி பகுதி விவசாயிகளுக்கு விதை உளுந்து வழங்கப்படவில்லை எனக்கூறி, ஏராளமான விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது: வேளாண் அலுவலகத்தில் அரசால் மானிய விலையில் வழங்கப்படும் பொருள்கள் சரிவர விவசாயிகளை சென்றடைவதில்லை. மொத்தமாக பெரிய

விவசாயிகளுக்கு சென்றுவிடுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் உளுந்து பயிரிட விதை உளுந்து, உரம், நுண்ணூட்டம் என சுமார் 4,500 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் அய்யம்பாளையம், தாதநாயக்கன்பட்டியில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் உள்ள ஆர்.வாடிப்பட்டிக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்தனர்.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் கூறுகையில், மானிய விலையில் விவசாய பொருள்கள் வழங்கப்படுவதை சிலர் அரசியலாக்குகின்றனர்.

இதனால் எதையும் உடனடியாக செய்ய முடிவதில்லை. ஆனால் விவசாயிகளுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்றார்.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் அடுமனை (பேக்கரி) பொருள்கள் தயாரிப்பு பயிற்சி மார்ச் 22, 23-ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில், ரொட்டி வகைகள், கேக், பிஸ்கெட் தயாரிப்பு, தொழில் தொடங்கும் உரிமம் பெறும் வழிமுறைகள் போன்றவை குறித்து விளக்கமளிக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் ரூ. 1,500 செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக் கட்டணத்தை அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்துக்கு தபால் மூலமாகவும் அனுப்பலாம். பயிற்சியில் சேர, பதிவு செய்து கொள்ள மார்ச் 22-ஆம் தேதி இறுதி நாளாகும். மேலும் விவரங்களுக்கு 0422 - 6611340, 6611268 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கோவையில் வேளாண் கண்காட்சி தொடக்கம்

கோவையில் யுனைடெட் டிரேடு ஃபேர்ஸ் நிறுவனம் நடத்தும் 3 நாள் வேளாண் கண்காட்சி வெள்ளிக்கிழமை தொடங்கியது.

அவிநாசி சாலையில் உள்ள சுகுணா திருமண மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில், வேளாண் கருவி தயாரிப்பு நிறுவனங்கள், விதைகள், இடுபொருள்கள், மாற்றுமுறை விவசாயம், மதிப்புக் கூட்டுப் பொருள் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் சார்பில் 80 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியை தமிழ்நாடு வேளாண் கருவிகள் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கே.விஸ்வநாதன் திறந்து வைத்தார். ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 20) வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில், இயற்கை விவசாயத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், சூரிய சக்தி மின் மோட்டார்கள், ரசாயனம் இல்லாமல் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் போன்றவற்றை விளக்கும் அரங்குகள் இடம் பெற்றிருப்பதாகவும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும், மாடித் தோட்டம், வீட்டுத் தோட்டம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் விதமாக, ஏற்கெனவே சிறந்த முறையில் தோட்டம் அமைத்து பராமரித்து வருபவர்களைத் தேர்வு செய்து பரிசு வழங்கப்படுகிறது. மேலும், இந்தக் கண்காட்சிக்கு வரும் விவசாயிகளுக்கு காந்திபுரத்தில் இருந்து இலவச வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

## கொடுவாயில் தடுப்பணை கட்டும் பணி ஆய்வு

கொடுவாய் பகுதியில் ரூ. 2 கோடியே 18 லட்சத்தில் தடுப்பணை கட்டும் பணியை பி.ஏ.பி. பாசன திட்ட உதவி செயற்பொறியாளர் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

பல்லடம் அருகேயுள்ள கொடுவாய் எல்லப்பபாளையம்புதூரில் நிழலி கரை ஒடை தடுப்பணை கட்டும் பணி ரூ. 2 கோடியே 18 லட்சத்தில் நடைபெற்று வருகிறது.

இத்தடுப்பணை அமைக்கும் பணியை பொங்கலூர் பி.ஏ.பி.பாசனத் திட்ட உதவி செயற்பொறியாளர் விவேகானந்தன், உதவிப் பொறியாளர் சதீஷ் ஆகியோர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இப்பணிகள் 3 மாதத்தில் நிறைவடைய உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தேயிலைச் செடிகளில் சிவப்பு நிறச் சிலந்தியால் பாதிப்பு

நீலகிரி மாவட்டத்தில், தேயிலைச் செடிகளில் சிவப்பு நிறச் சிலந்திகள் தாக்குதல் காரணமாக கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பகல் நேரங்களில் சமவெளிப் பகுதிக்கு ஈடாக கடும் வெயிலும், இரவு நேரங்களில் லேசான நீர்ப்பனிப் பொழிவும் நிலவி வருகிறது. இதனால், மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி ஏற்பட்டு, தேயிலைத் தோட்டங்கள், வனப் பகுதிகள் மற்றும் விளை நிலங்கள் வறட்சியடைந்துள்ளன.

மேலும், போதிய அளவில் மழை இல்லாததால், தேயிலைச் செடிகள் நோய்த் தாக்குதலுக்குள்ளாகி, மகசூல் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குன்னூர், கொலக்கம்பை, டெரேமியா, தூதூர் மட்டம் கரன்ஸி, சேலாஸ், கரும்பாலம் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான தேயிலைச் செடிகளில் சிவப்பு நிறச் சிலந்தித் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

இதனால், விவசாயிகளும், தொழிலாளர்களுக்கும் கடும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். தேயிலைச் செடிகளை நோயில் இருந்து காப்பாற்ற மெய்டீன் என்ற மருந்தை சிறு, குறுந் தேயிலை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.

மேலும், மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகளை அரசு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நெற்பயிரில் பழநோயை கட்டுப்படுத்தும் வழிமுறை

நெற்பயிரில் பரவி வரும் பழநோயை கட்டுப்படுத்திடும் வழிமுறையை வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து அனக்காவூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

அனக்காவூர் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் தற்போது கதிர்பிடிக்கும் பருவத்தில் உள்ளன. இந்நிலையில், கதிரில் நெல் பழநோய் காணப்படுகிறது. இந்த நோயானது நெற்கதிரில் சில நெல் மணிகளை மட்டும் மஞ்சளாகவும், பின்னர் ஆரஞ்சு நிறத்துக்கும், அதன் பின்னர் கருப்பாகவும் மாற்றிவிடுகின்றன.

இதனை தடுக்கும் விதமாக நெல்லில் பூ பூப்பதற்கு முன்பாகவும், பூ பூத்தவுடன் ஒரு முறையும் புரஃப்பிபோகோனசோல் ஒரு ஏக்கருக்கு 200 மில்லி அல்லது காப்பர் ஹைடிராக்சைடு ஒரு ஏக்கருக்கு 500 கிராம் வீதம் தெளித்து நெற்பயிரினை பாதுகாத்திட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## கோடைகாலப் பராமரிப்பு முறைகளை கடைப்பிடிக்க கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல்

கடும் வெயில் காரணமாக கோழிகள் இறக்க வாய்ப்புள்ளதால், கோடைகாலப் பராமரிப்பு முறைகளை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும் என கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது:

அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையற்று இருக்கும். கோடை வெப்பத்தின் தாக்கம் சற்றே அதிக அளவில் காணப்பட்டு, கோழிகளில் வெப்ப அயற்சியும், சில சமயங்களில் வெப்ப அதிர்ச்சியும் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், காற்றின் வேகம் சென்ற வாரத்தைவிட குறைந்துள்ளதால், வெப்பத்தின் தாக்கமும் கூடுதலாக வாய்ப்புள்ளது. எனவே, பண்ணையாளர்கள் மிகவும் கவனமாக கோழிகளுக்குத் தேவையான நீர் பகல் முழுவதும்

கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கோழிகளில் இறப்பும், முட்டை எடை குறைபாடுகளும் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல் மூச்சுக்குழாய் நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதனால் பண்ணையாளர்கள் அதற்கேற்றார்போல் தகுந்த உயிர் பாதுகாப்பு முறைகளையும், கோடைகாலப் பராமரிப்பு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலுதவி பயிற்சி, மரக்கன்றுகள்**

அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலுதவி பயிற்சி, மரக்கன்றுகளை வழங்கி வருகிறார் கரூர் பரணி வித்யாலயா பள்ளி மாணவி.

கரூர் வெண்ணைமலை பரணி வித்யாலயா பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வரும் மாணவி ரக்ஷனா, விபத்தினால் ஏற்படும் இழப்புகளை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அறிந்துகொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். கடந்த டிசம்பர் மாதம் முதல் முதலுதவி கற்போம், விபத்தில் உடல் உறுப்பு ஊனம் தடுப்போம் என்ற மையக்கருத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் இம்மாணவி, இதுவரை கரூர், பழனி, கும்பகோணம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், கோயில்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் இதுவரை 50,000 பேருக்கு முதலுதவி பயிற்சியளித்துள்ளார். மேலும் 25 பள்ளிகளுக்கு முதலுதவி குறித்து 500 புத்தகம் வழங்கியுள்ளார்.

இதைத்தொடர்ந்து வெள்ளிக்கிழமை இந்த மாணவி சார்பில் கரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 6,000 மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் வந்திதாபாண்டே தொடக்கி வைத்து அரசுப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு

மரக்கன்றுகளை வழங்கினார். பள்ளியின் முதன்மை முதல்வர் சி. இராமசுப்ரமணியன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் மருத்துவர்கள் கே. செல்வம், கே. தீபா மற்றும் பள்ளி முதல்வர் எஸ். சுதாதேவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கோடைகாலப் பராமரிப்பு முறைகளை கடைப்பிடிக்க கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல்

கடும் வெயில் காரணமாக கோழிகள் இறக்க வாய்ப்புள்ளதால், கோடைகாலப் பராமரிப்பு முறைகளை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும் என கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி சார்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது:

அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையற்று இருக்கும். கோடை வெப்பத்தின் தாக்கம் சற்றே அதிக அளவில் காணப்பட்டு, கோழிகளில் வெப்ப அயற்சியும், சில சமயங்களில் வெப்ப அதிர்ச்சியும் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், காற்றின் வேகம் சென்ற வாரத்தைவிட குறைந்துள்ளதால், வெப்பத்தின் தாக்கமும் கூடுதலாக வாய்ப்புள்ளது. எனவே, பண்ணையாளர்கள் மிகவும் கவனமாக கோழிகளுக்குத் தேவையான நீர் பகல் முழுவதும் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கோழிகளில் இறப்பும், முட்டை எடை குறைபாடுகளும் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல் மூச்சுக்குழாய் நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதனால் பண்ணையாளர்கள் அதற்கேற்றார்போல் தகுந்த உயிர் பாதுகாப்பு முறைகளையும், கோடைகாலப் பராமரிப்பு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மிளகாய்சீசன்

மூன்றுமாத பயிரான மிளகாய் தோட்டத்தில் மூன்று மாதத்தில் அறுவடை செய்யப்படும். தையில் நடப்பட்ட மிளகாய்க்கு தற்போது அறுவடை சீசன். தமிழக உள்ளூர் மிளகாயை விட, ஆந்திராவின் குண்டூர் காரமிளகாய்க்கு தான் விலை அதிகம். மிளகாய் வர்த்தகத்திற்கான ஆசியாவின் பெரிய சந்தை குண்டூரில் உள்ளது. 'குண்டூர் சன்ன மிளகாய்' என்ற பெயரில், குண்டூர் மிளகாய்க்கு புவியியல் குறியீடு எண் கிடைத்துள்ளது. மெக்சிகோ மிளகாய்க்கு அடுத்தபடியாக உலக வர்த்தக அரங்கில் குண்டூர் மிளகாய்க்கு தான் விலை அதிகம்.

### நெல் கொள்முதல் நிலையங்களில் ஆந்திர நெல் விற்பனை அதிகரிப்பு

தமிழக அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், ஆந்திர மாநிலத்தில் விளையும் நெல் கொள்முதல் செய்யப்படுவதால், அறுவடை பருவத்தில் இருக்கும் தமிழக நெல் விவசாயிகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 70 கொள்முதல் நிலையங்கள் உள்ளன. இந்த நெல் கொள்முதல் நிலையங்களில், மாவட்ட விவசாயிகளின் நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய வேண்டும்.

ஆனால், மாவட்ட விவசாயிகளின் நிலங்களில் அறுவடை துவங்கும் முன்பே, ஆந்திர மாநிலத்தில் விளையும் நெல்லை, காஞ்சிபுரம் மாவட்ட அரசு கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படுகிறது.

உதாரணமாக, கட்டவாக்கம், வேடபாளையம், கோவிந்தவாடி ஊராட்சி கம்மவார்பாளையம் கிராமத்தில் இயங்கும் நெல் கொள்முதல் நிலையங்களில், ஆந்திர மாநில நெல்லை, விற்பனைக்கு இறக்குமதி செய்து, அதிகாரிகளின் துணையோடு வியாபாரிகள் விற்பனை செய்வதாக குற்றச்சாட்டு எழுந்து உள்ளது.

கோவிந்தவாடி நெல் கொள்முதல் நிலையத்தில், ஆந்திர மாநில நெல்லை, லோடு, லோடாக இறக்குமதி செய்து, வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர். இதற்கு, அதிகாரிகளே உடந்தையாக உள்ளனர். இதனால், அறுவடை பருவத்தில் இருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படுவர்.

-டி.என்.ஆர்.,சேகர்அனைத்து பயிர் சாகுபடி சங்க மாவட்ட துணை தலைவர்

நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளின் சிட்டா அடங்கலின் அடிப்படையில், நெல் கொள்முதல் செய்ய, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி தான், நாங்கள் கொள்முதல் செய்கிறோம். நுகர்பொருள் வாணிப கழக அதிகாரி ஒருவர்

**காளிங்கராயன் அணைக்கட்டில் முழு வீச்சில் புணரமைப்பு**

பவானி: பவானி, காளிங்கராயன் அணைக்கட்டில், புணரமைப்பு பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட காளிங்கராயன் அணைக்கட்டு, 231 மீ., நடு பக்க அணைக்கட்டு, 261 மீ., முரியன் அணைக்கட்டு, 412 மீ., என ஒரு கி.மீ., நீளம் கொண்ட பகுதி முழுவதும், 7.80 கோடி, மதிப்பீட்டில் புணரமைக்கும் பணி முழு வீச்சில் நடக்கிறது. உள் பக்கத்தில் கம்பி அமைத்தும், கான்கிரீட் சுவர் அமைத்தும், வெளிப்பக்கம் கான்கிரீட் தளம் அமைத்தும் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படுகிறது. பணிகள் அனைத்தும் மூன்று மாத காலத்துக்குள் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

## தேயிலையை காக்கும் பாக்குமர மட்டைகள்

கூடலுார்:கூடலுார் பகுதியில், வெயிலில் இருந்து தேயிலை செடியை காப்பாற்ற, பாக்குமர மட்டைகளை கொண்டு, செடிகளை மூடும் பணிகள் நடந்து வருகின்றன.

கூடலுாரில் கடந்த ஜனவரி முதல் வறட்சி ஏற்பட்டு வருகிறது. இதனால், வனப்பகுதிகளில், வனத்தீ ஏற்பட்டு, வன விலங்குகளுக்கு உணவு, குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கூடலுார் பகுதியில் தற்போது அதிகாலையில் பனிப்பொழிவு, பகல் நேரத்தில் கடும் வெயில், இரவில், அதிக வெப்பம் ஆகிய காலநிலை நிலவுகிறது. இந்த காலநிலை மாற்றத்தால், தேயிலை மகசூல் பாதிக்கப்படுகிறது.பனிப்பொழிவு மற்றும் வெயிலின் தாக்கத்தில் இருந்து தேயிலை செடிகளை பாதுகாக்க, பாக்கு மர மட்டைகளை கொண்டு, தேயிலையை மூடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## மேரக்காய் விளைச்சல் அதிகம் சிறு விவசாயிகளுக்கு லாபம்

கோத்தகிரி:கோத்தகிரி சுற்றுவட்டார விவசாயிகள், மேரக்காய் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பசுந்தேயிலை விலை வீழ்ச்சியில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள, மலைக்காய்கறி சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். கோத்தகிரி பகுதியில், கேரட், பீன்ஸ் மற்றும் முட்டைகோஸ் சாகுபடி செய்யப்பட்ட நெடுகுளா, மிளிதேன், வ.உ.சி., நகர், சுள்ளிகூடு மற்றும் கூக்கல் தொரை பகுதிகளில், மேரக்காய் சாகுபடியும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது.

வறட்சி காரணமாக, நீர் ஆதாரங்கள் வற்றிவருவதால், கிணறுகள் வெட்டி, 'பம்ப் செட்' மூலம், விவசாயிகள் தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.குறைந்த முதலீட்டில், அதிக லாபம் கிடைப்பதாலும், குறைந்தளவு தண்ணீர் போதுமானது என்பதாலும்,

சிரமமின்றி மேரக்காய் பயிரிட்டு, கொடிகள் படர பந்தல் அமைத்து, விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

மிளிதேன் பகுதி விவசாயி சில்லபாபு கூறுகையில், “காரட், பீன்ஸ் மற்றும் முட்டைகோஸ் உள்ளிட்ட மலைக்காய்கறி சாகுபடி செய்ய, அதிக முதலீடு தேவை. மேரக்காய்க்கு முதலீடு குறைவு. அதனால், மேரக்காய் பயிரிட்டுள்ளோம். மேலும், மேரக்காய் தோட்டத்தில், கீரை வகைகளும் ஊடுபயிராக விளைவிப்பதால், விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது,” என்றார்.

## கற்றாழையில் பூத்துள்ள செந்நிற மலர்

ஊட்டி:ஊட்டியில் கற்றாழையில் பூத்துள்ள மலரின் அழகு பார்வையாளர்களை பரவசப்படுத்துகிறது.

ஊட்டியில் கோடை சீசனுக்காக, பல வண்ண மலர்கள் வளர்க்கப்படும் நிலையில், வெப்பமான பகுதிகளில் மட்டும் காணப்படும், கற்றாலை வகை செடிகளும் இங்கு வளர்க்கப்படுகின்றன.

இதன் பூக்கள், குழாய் வடிவத்திலும், அதிகமாக மஞ்சள், இளம் சிவப்பு, சிவப்பு நிறங்களிலும், அடர்த்தியான கொத்துகளாகவும் காணப்படுகின்றன.சதைப்பற்றுள்ள நீர்ச்சத்து மிக்க இக்குறுஞ்செடி, பல பருவங்கள் வாழக்கூடியதாக உள்ளது. ஊட்டி நகரின் பல பகுதிகளில் வளர்ந்துள்ள இந்த கற்றாழை செடியில், தற்போது, செந்நிற பூக்கள் பூத்துள்ளன. தாவரவியல் ஆராய்ச்சியாளர் டாக்டர் ராம்சுந்தர் கூறியதாவது:இந்த வகை கற்றாழை 'இபிபைட்டிக்' குடும்பத்தை சேர்ந்த, 'ஹைட்டியோரா ஜியேட்நெறி' என்ற தாவர பெயரை கொண்டது. இதன் பூர்வீகம் தென் அமெரிக்காவாகும். கற்றாழை இலையில் இருந்து எடுக்கப்படும் கூழ், சருமத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. வெப்பத்தை ஏற்படுத்தும் 'காமா', 'எக்ஸ்ரே' கதிர் வீச்சுகளின், தீய விளைவுகளில் இருந்து சருமத்தை பாதுகாக்கிறது. கற்றாழை இலையில், 'அலோயின்', 'அலோசோன்' போன்ற வேதிப்பொருட்கள் உள்ளன. சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கற்றாழைச்சாறு, இருமல், சளி, குடல்புண்

ஆகியவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகின்றது. இதன் பூக்கள், அலங்காரத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. செடிகளாக, சட்டிகளிலும் வளர்க்கப்படுகின்றன. சதை பற்றான தாவரங்களை சேகரிக்கும் நபர்களுக்கு, இந்த வகை தாவரம் மிகவும் மதிப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. இவ்வாறு ராம்சுந்தர் கூறினார்.

## சீசனுக்கு முன்பே மாங்காய் அறுவடைவெப்பத்தால் உதிரும் பிஞ்சுகள்

நத்தம்: நத்தம் பகுதியில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக சீசன் முழுமையாக துவங்குவதற்கு முன்பாகவே விவசாயிகள் மாங்காயை அறுவடை செய்கின்றனர்.

நத்தம் மற்றும் சாணார்பட்டி வட்டாரங்களில் கோபால்பட்டி, அய்யாபட்டி, மொட்டையகவுண்டன்பட்டி, முளையூர், எரமநாயக்கன்பட்டி, சிறுகுடி, பட்டணம்பட்டி, மூங்கில்பட்டி, வத்திப்பட்டி, காசம்பட்டி, லிங்கவாடி, பரளி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் "மா' சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கல்லாமை, பாலாமணி, நாடு, செந்தூரம், சப்பட்டை உள்ளிட்ட ரகங்கள் விளைகின்றன. இவற்றில் கல்லாமை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பிஞ்சுகள் உருவாகியுள்ளன. சில இடங்களில் காய்கள் பெரிதாக காய்த்துள்ளன.

போதிய மழை இல்லாமலும், நிலவும் கடும் வெப்பத்தாலும் மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். கோடை மழையும் இதுவரை பெய்யவில்லை. இதனால் பிஞ்சுகள் அதிக அளவில் உதிர்ந்து வருகின்றன.

இதே நிலை நீடித்தால் ஒருசில இடங்களில் வளர்ச்சியடைந்த காய்கள் சுருங்கி தரம் குறைந்துவிடும். எனவே சீசன் முழுமையாக துவங்க பல நாட்கள் இருக்கும் முன்பே விவசாயிகள் மாங்காய்களை அறுவடை செய்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பெரும் நஷ்டத்தை சந்திக்கும் நிலையில் இப்பகுதி "மா' விவசாயிகள் உள்ளனர்.

## தட்டப்பயறு சாகுபடி அதிகரிப்பு

குளித்தலை: குளித்தலை அடுத்த, மூட்டக்காம்பட்டி பகுதியில் கிணற்று பாசனம் மூலம் தட்டை பயறு சாகுபடி செய்து வருவது குறைந்து விட்டது. குறிப்பாக, தட்டை பயர் சாகுபடியில் விவசாயிகள் தனிக்கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து, விவசாயி பிரசாத் கூறியதாவது: மூன்று மாத பயிரான தட்டை பயறு, 30 நாட்களில் அறுவடைக்கு வரும். அறுவடை செய்த தட்டைபயிறு திருச்சி, மணப்பாறை போன்ற சந்தைகளுக்கு, ஒரு கிலோ, ஏழு முதல், 15 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. தோகைமலை ஒன்றிய பகுதியில், நிலத்தடி நீர்மட்டம், 700 அடிக்கு கீழ் சென்று விட்டது. இதனால், கிணற்று பாசனங்கள் பெரும்பாலான பகுதிகளில் குறைந்து விட்டது. தற்போது ஆழ்குழாய் கிணற்றின் மூலம் தண்ணீரை கிணறுகளில் சேமித்து, ஒரு சில சாகுபடிகளை மட்டும் விவசாயிகள் செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கோமாரி நோய் தடுப்பூசி

வருஷநாடு:

கண்டமனூர்,கடமலைக்குண்டு,மயிலாடும்பாறை,முத்தாலம்பாறை,

மூலக்கடை,அருகவெளி,

தங்கம்மாள்புரம்,வருஷநாடு,சிங்கராஜபுரம்,முருக்கோடை,வாலிப்பாறை,

தும்மக்குண்டு,குமணந்தொழு,கோம்பைத்தொழு உட்பட 150க் கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் விவசாயத்திற்கு அடுத்த படியாக கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில்.

கடந்த சில மாதங்களுக்கு முன் பத்திற்கும் மேற்பட்ட கறவை மாடுகள் கோமாரி நோய் தக்கி இறந்தது. இந்நிலையில் அந்நோய் மீண்டும் வராமல் தடுக்க கால்நடை மருத்துவர்கள் மார்ச் 15 முதல் கிராமங்கள் தோறும் மாடுகளுக்கு கோமாரி நோய்

தடுப்பூசி போட்டு வருகின்றனர். நாளை வரை முகாம் நடக்கிறது. கால்நடை வளர்ப்போர் இதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கால்நடை மருத்துவர் வெயிலான் தெரிவித்துள் ளார்.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பங்குனி உத்திரத்துக்கு பழநி தயார் பஞ்சாமிர்தம் தயாரிக்க 200 டன் மலை வாழை



பழநி : பங்குனி உத்திர திருவிழாவையொட்டி, பழநியில் பக்தர்கள் பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்காக, 200 டன் மலை வாழைப்பழங்கள் விற்பனைக்கு தயாராக உள்ளன. பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் பங்குனி உத்திர திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் துவங்கியது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் 23ம் தேதி நடக்கிறது. விழாவில் கலந்துகொள்ள தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் பழநி வந்துள்ளனர். இவ்வாறு வரும் பக்தர்கள் சிறு சிறு குழுக்களாக பிரிந்து தாங்களாகவே பஞ்சாமிர்தம் தயாரித்து, சாமிக்கு அபிஷேகம் செய்துவிட்டு,

தங்களுக்குள்ளாகவே பகிர்ந்து கொள்வர்.

இப்பஞ்சாமிர்தம் தயாரிக்க பயன்படும் முக்கிய பொருட்களில் ஒன்று மலை வாழைப்பழம். பழநி நகரில் தற்போது ஏராளமான தற்காலிக கடைகள் ஏற்படுத்தப்பட்டு, சுமார் 200 டன் மலை வாழைப்பழங்கள் விற்பனைக்கு வந்திறங்கியுள்ளன. வடகவுஞ்சி, வத்தலக்குண்டு, பன்றிமலை, ஆடலூர் மற்றும் கர்நாடக மாநிலம் குடகு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மலை வாழைப்பழங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. திருப்பூரைச் சேர்ந்த பக்தர் தமிழரசன் கூறுகையில், ''மழை இல்லாததால் வரத்து குறைந்து, தற்போது மலை வாழைப்பழங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு 1 பழம் ரூ.4க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த முறை நல்ல பழம் சுமார் ரூ.5க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பஞ்சாமிர்தம் தயாரிக்க மலை வாழைப்பழங்களை குறைவாக பயன்படுத்த வேண்டி உள்ளது,'' என்றார்.

## காரைக்காலில் இருந்து ஒரே நாளில் 12,000 கிலோ கெழுத்தி மீன்கள் கேரளாவுக்கு அனுப்பி வைப்பு



காரைக்கால் : காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று ஒரே நாளில் 12 ஆயிரம் கிலோ கெழுத்தி மீன்கள் கேரளாவுக்கு அனுப்பி

வைக்கப்பட்டது. காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்கு சென்ற மீனவர்கள் வலையில், ஏற்றுமதி தரம் வாய்ந்த பாறை, பன்னி, வஞ்சிரம், கொடுவா உள்ளிட்ட பெரிய மீன்வரத்து கடந்த சில மாதங்களாக குறைந்து போனது. பெரிய மீன்களுக்கு மாற்றாக, பெரும் அளவில் மத்தி மீன்களும், அவ்வப்போது செம்பரா, கெழுத்தி மீன்களும் கிடைத்து வருகிறது. மத்தி மீன்களை கொண்டு செல்ல காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் ஏராளமான கேரள மீன் லாரிகள் குவிந்த வண்ணம் உள்ளது. மத்தி மீன் மட்டும் உணவு, மருந்து மற்றும் கோழித்தீவனம் ஆகியவற்றுக்காக நாள் ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரம் கிலோ கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில் அவ்வப்போது குறைந்த அளவில் கிடைத்துவந்த கெழுத்தி மீன்கள் நேற்று அதிக அளவில் கிடைத்தது. கிலோ ரூ.60 என ஒரே நளில் சுமார் 12 ஆயிரம் கிலோ கெழுத்தி மீன்கள் கேரளாவுக்கு உணவுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

## மீன் வளர்ப்பு திட்டத்தில் பூண்டி ஏரியில் மீன் வளர்க்க தொட்டிகள் அமைக்கும் பணி தீவிரம்

திருவள்ளூர், : பூண்டி ஏரி. சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் ஒன்று. இந்த ஏரியில், மீன் வளர்ப்பு திட்டத்தின்கீழ் மீன்கள் வளர்க்க 2012ம் ஆண்டு மத்திய அரசு ரூ.3.25 கோடி நிதி ஒதுக்கியது.இந்த நிதியில், மீன்கள் வளர்க்கும் வகையில், முதற்கட்டமாக ரூ.1.25 கோடி மதிப்பில் 20 தொட்டிகள், ரூ.1.02 கோடி மதிப்பில் மீன்களுக்கான உணவுகள், ரூ.5 லட்சம் மதிப்பில் மீன் குஞ்சுகள் வாங்கப்பட்டு, கடந்த 26.11.2012 அன்று தொட்டிகளில் மீன் வளர்க்கும் திட்டம் துவங்கப்பட்டது.இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் பெய்த கனமழையால் மீன் வளர்ப்பு தொட்டிகள் சேதமானது.

மேலும், தொட்டிகளில் வளர்க்கப்பட்டு வந்த 20 டன் மீன்கள் செத்து துர்நாற்றம் வீசியதால், அவை அப்புறப்படுத்தப்பட்டு புதைக்கப்பட்டன. இதனால், மத்திய அரசு பணம் ரூ.3.25 கோடி வீணானது.இந்நிலையில் மீண்டும் மீன் வளர்ப்பு திட்டத்தை துவக்குவதற்காக, தொட்டிகள்

அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்துவருகிறது. இப்பணிகள் முடிந்ததும் அதில், மீன் குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்படும் என மீன் வளர்ப்பு துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**வேளாண் சார்ந்த தொழிலிலும் பட்டதாரிகள் ஈடுபட வேண்டும்**

விழுப்புரம், : விழுப்புரம் அருகே ஒரத்தூர் சுவாமி விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி தலைவர் தியாகராஜன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகன் கலந்து கொண்டு முதுகலை பட்டதாரிகள் 15 பேர், பட்டதாரிகள் 233 பேர் என மொத்தம் 248 பேருக்கு பட்டங்களை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:

மாணவர்களாகிய நீங்கள் இருக்கும் இடத்தையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இது வாழ்க்கையின் வெற்றிக்கு வழிவகுக்கும். பட்டங்களை முடித்துவிட்டு வேலை தேடிச்செல்லாமல் வேலைவாய்ப்பை தாமே உருவாக்கிக்கொள்ள வேண்டும். விவசாயம் சார்ந்த தொழில்களான பட்டுப்பூச்சி, தேனீ வளர்த்தல் போன்றவற்றிலும் ஈடுபடலாம். உங்களால் 10 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி கொடுக்க முடியும். பெற்றோர்களையும், கல்வி கற்றுத்தந்த ஆசிரியர்களையும் என்றும் மதிக்க வேண்டும்.

எங்கு சென்றாலும் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். இந்த நடைமுறைகளை எல்லாம் வாழ்க்கையை உயரத்திற்கு கொண்டுசெல்லும்.இவ்வாறு அவர் பேசினார்.விழாவில் மாணவ, மாணவிகளுக்கு சென்னை ராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா கல்லூரி செயலாளர் சுவாமி சுகதேவ்னந்தஜி ஆசியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் பரந்தாமன், மாணவ, மாணவிகள் பெற்றோர்கள், துறைத்தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் முத்துவேலன் நன்றி கூறினார்.

## 6,500 மூட்டை பருத்தி ரூ1.10 கோடிக்கு ஏலம்

நாமக்கல் : நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் போன்ற பகுதிகளை சேர்ந்த வியாரிகள் கலந்து கொண்டனர். பல்வேறு ஊர்களை சேர்ந்த விவசாயிகள் 6,500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் ஆர்சிஎச் ரக பருத்தி குவிண்டால் ரூ.4,315 முதல் ரூ.4,912 வரையும், டிசிஎச் ரகம் ரூ.5,642 முதல் ரூ.6,389 வரையும், சுரபி ரக பருத்தி ரூ.4,296 முதல் ரூ4,949 வரையும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம் 6,500 பருத்தி மூட்டை ரூ.1.10 கோடிக்கு ஏலம் ேபானது.

## கிருஷ்ணகிரி அணையில் மீன் பிடிக்க ரூ.2.06 கோடிக்கு குத்தகை

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி அணையில் மீன் வளத்துறை சார்பில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு, அதனை பிடித்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் அரசுக்கு குறைந்த அளவே வருமானம் வந்ததால், ைஅணயில் மீன் பிடித்து விற்பனை செய்ய கடந்த 2013ம் ஆண்டு முதல் தனியாருக்கு குத்தகைவிட முடிவு செய்து, அதற்கான டெண்டர் விடப்பட்டது. 2013ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி அணையில் மீன் குஞ்சுகள் விட்டு வளர்த்து, அதனை பிடித்து விற்பனை செய்ய கிருஷ்ணகிரி டிபி லிங்க் ரோடு, பட்டாளம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த ராஜா என்பவர் முதல் வருடத்திற்கு ரூ.1 கோடியே 34 லட்சத்திற்கு டெண்டர் கோரியிருந்தார்.

அதிகபட்ச தொகை கோரியிருந்ததால், அவருக்கு மீன்வளத்துறை அணையில் மீன் பிடித்து விற்பனை செய்ய உத்தரவு வழங்கியது. அத்துடன் ஒவ்வொரு வருடமும் 10 சதவீத தொகையினை அதிகரித்து 5 வருடமும் செலுத்த வேண்டும் என்று அந்த உத்தரவில் மீன்வளத்துறை குறிப்பிட்டிருந்தது. அதன்படி, நான்காம் ஆண்டான கடந்த பிப்ரவரி 1ம் தேதி முதல் வரும் 2017ம் ஆண்டு ஜனவரி 31ம் தேதி வரை கிருஷ்ணகிரி

அணையில் மீன் பிடித்து விற்பனை செய்ய குத்தகை தொகையாக ரூ.1 கோடியே 79 லட்சமும், வரியாக ரூ.8 லட்சத்து 98 ஆயிரமும், மீனவர் வளர்ச்சி குழுமத்திற்கு ரூ.8 லட்சத்து 98 ஆயிரமும், ராயல்டியாக ரூ.9 லட்சத்து 37 ஆயிரமும் என மொத்தம் ரூ.2 கோடியே 6 லட்சத்து 33 ஆயிரத்திற்கு மீன்வளத்துறை குத்தகை விடப்பட்டுள்ளது.

**கோடை சீசன் துவங்கியுள்ளதால் சுற்றுலாத்துறை, தோட்டக்கலைத்துறை மேம்பாட்டு பணிகள் மும்முரம்**

ஊட்டி, : கோடை சீசன் துவங்கிய நிலையில் சுற்றுலாத்துறை, தோட்டக்கலைத்துறை மேம்பாட்டு சார்பில் நடக்கும் பணி மும்முரம் அடைந்து வருகிறது. மலை மாவட்டமான நீலகிரிக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். கோடை சீசனை முன்னிட்டு ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகளவில் காணப்படும்.
நீலகிரி மாவட்டத்தில் தற்போது அனைத்து சுற்றுலா தலம், தங்கும் விடுதிகள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

படகு இல்லத்தில் பழுதடைந்த படகுகள் சீரமைப்பு, வர்ணம் பூசும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுற்றுலா பயணிகள் வருகையை முன்னிட்டு சுற்றுலாத்துறை, தோட்டக்கலைத்துறை தற்போது மேம்பாட்டு பணியில் மும்முரம் காட்டி வருகின்றனர்.
கோடை சீசனை முன்னிட்டு பார்க்கிங் வசதிகள் மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்துவதில் மாவட்ட நிர்வாகம், காவல்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 70 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 11வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 2 லட்சத்து 96 ஆயிரத்து 927 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 1 லட்சத்து 77 ஆயிரத்து 103 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 19 ஆயிரத்து 824 கிலோவும்

அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் குறைந்த அளவில் மட்டுமே தேயிலை தூள்களை கொள்முதல் செய்தனர். இதனால் 70 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 முதல் ரூ.3 வரை விலை உயர்ந்தது.

இதன்படி இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.70 முதல் ரூ.75 உயர் வகை ரூ.80 முதல் ரூ.85, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.70 முதல் ரூ.75, உயர் வகை ரூ.79 முதல் ரூ.85 வரை விலை கிடைத்தது. கடந்த சில வாரங்களாக தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் குறைந்து வந்த நிலையில் இந்த வாரம் விலை உயர்ந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.
கோத்தகிரி பகுதிகளில் கேரட் அறுவடையில் விவசாயிகள் தீவிரம்

கோத்தகிரி : நீலகிரி மாவட்டத்தில் கேரட், பீன்ஸ், முட்டைகோஸ் உள்ளிட்ட காய்கறிகள் அதிகளவு விளைவிக்கப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள் மேட்டுப்பாளையம், கோவை மற்றும் மைசூரு உள்ளிட்ட இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பயிரிட்ட நாளிலிருந்து 90வது நாளில் கேரட் அறுவடை செய்யப்படுகிறது. ஹைபிரிட் கேரட்டுகள் அதிகளவு மகசூல் தருகின்றன. தற்போது முதல்தர கேரட் கிலோ ரூ.38 முதல் ரூ.45 வரை விலை போகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கடந்த பனிக்காலத்தின் போது பயிரிடப்பட்ட கேரட்டுகள் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. இதனால் கேரட்டுகளை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## ஈரோட்டில் 102.2 டிகிரி வெயில் கொளுத்தியது சாலையோரங்களில் தர்பூசணி–முலாம்பழம் விற்பனை மும்முரம்



ஈரோடு

ஈரோட்டில் 102.2 டிகிரி வெயில் கொளுத்தியது. இதனால் சாலையோரங்களில் தர்பூசணி, முலாம்பழம் விற்பனை மும்முரமாக நடந்து வருகிறது.

102.2 டிகிரி வெயில்

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியதால் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மதிய நேரங்களில் அனல் காற்று வீசுவதால் பொதுமக்கள் ரோட்டில் செல்லவே சிரமப்படுகின்றனர்.

ஈரோட்டில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வருகிறது. நேற்று முன்தினம் அதிகபட்சமாக 100.4 டிகிரி வெயில் அடித்தது.

ஈரோட்டில் நேற்று அதிகபட்சமாக 102.2 டிகிரி வெயில் வாட்டி எடுத்தது. வெப்பத்தை தணிக்க பலர் ரோட்டோரங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ள தர்பூசணி பழங்களை வாங்கி சாப்பிடுகிறார்கள். முலாம் பழம், இளநீர் விற்பனையும் அமோகமாக நடந்து வருகிறது. குளிர்பானக்கடைகளில் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. தர்பூசணி, முலாம்பழம், இளநீர் போன்றவை வெளிமாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து ஈரோட்டிற்கு அதிகமாக கொண்டு வரப்பட்டு ரோட்டோரங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

<u>தர்பூசணி, முலாம்பழம்</u>

இதுகுறித்து ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

கோடை கால தொடக்கத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் தர்பூசணி, முலாம் பழத்தின் விற்பனை அதிகரித்து உள்ளது. திருவண்ணாமலை, திண்டிவனம், அரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தர்பூசணி அதிகமாக கொண்டு வரப்படுகிறது. தற்போது சீசன் தொடங்கி உள்ளதால் மார்க்கெட், சாலையோர கடைகள், வாரச்சந்தைகள் என பல்வேறு இடங்களில் தர்பூசணி விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு உள்ளது. ஒரு கிலோ தர்பூசணி ரூ.13–க்கு விற்பனையாகிறது.

இதேபோல் சூட்டை தணிக்கும் முலாம்பழம் சாறு (ஜூஸ்) பொதுமக்கள் விரும்பி பருகுவதால் அதன் தேவை அதிகரித்து உள்ளது. இதனால் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து அதிகமாக முலாம்பழம் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இந்த பழங்கள் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனையாகிறது.